முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 11.09.2025 அ.வ.எண்55/2016. வா.சா.1. முத்துசாமி க/பெ. ரங்கசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிரதிவாதிகள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தென்புற சுற்றுச்சுவரை இடித்து விட்டு அவர்கள் செலவிலேயே கோவிலுக்கு சுற்றுச்சுவர் கட்டித்தருவதாக பைசல் பேசினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பைசல் பேசப்பட்டது என்றும் முதலில் ஒப்புக்கொண்டு பின்னிட்டு நாங்கள் மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல.இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது இடைநிலை மனு எண்.182/2016 மனு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி மனுவில் எதிர்மனுவாதிகள் எதிர்க்கட்சி தாக்க்ல செய்யாததால் ஒரு தலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) மேற்படி உத்தரவு நிலுவையில் இருந்த போதே எதிர்மனுவாதிகள் கோவிலுக்கு வடபுறம் உள்ள சுவற்றை இடித்துவிட்டார்கள் என்று கூறி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 364/2017, 365/2017 என்ற இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவில் கோவில் வடபுற சுவற்றை 12.11.2016 தேதியில் 4 அடி அளவிற்கு இடித்து விட்டதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கோவிலுக்கு வடபுறம் சுற்றுச்சுவரே கட்டவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறியிருந்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீடு கோவிலுக்கு தென்புறமாக உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு வடபுறம் உள்ள சுவற்றை இடிப்பதால் பிரதிவாதிகளுக்கு எந்த பிரயோஜனமும் இல்லை என்றால் சரியல்ல,. வடபுற எல்லை வரை அவர்கள் மதில்சுவர் கட்டியுள்ளார்கள். பொய்யான தகவல் கூறி மனு எண். 364/2017 ல் பிரதிவாதிக்கு ஜப்தி உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்( R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

3) என்னிடம் காட்டப்படுவது தான் கோவில் அமைப்பின் புகைப்படம் என்றால் சரிதான். கோவிலுக்கு தென்புறம் உள்ள சுவர் பிரதிவாதிகளுடையது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சுவரை ஒட்டியுள்ள சுவர் எங்களால் கட்டப்பட்டது என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி வா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவு பெற்றதற்கு பின்னிட்டு தான் கோவிலின் தென்புற சுற்றுச்சுவரை கட்டினோம் என்றால் சரிதான். கோவிலின் அஸ்திவாரம் மேற்புறத்தில் கம்பிவேலியிருந்து 10 அடி தூரம் மேற்கே தள்ளி அமைத்தோம் என்றால் சரிதான். க.ச.எண். 332/8 ல் கோவில் ஏற்கனவே எந்த அளவிற்கு இருந்ததோ அந்த அளவிற்கு கட்டுவதற்கு மட்டும் தான் உரிமையுள்ளது என்றும் ஆனால் தற்போது பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து கூடுதல் இடத்தில் கோவில் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

4) கோவிலை சுற்றி சுற்றுச்சுவர் கட்டியுள்ள இடங்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று எதிர்வாதத்தில் குறிப்பிட்டுள்ள விவரம்தெரியுமா என்றால் தெரியாது. அந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் தெரிந்தே வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றும் அதனால் விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவாசொத்தில் ஏற்கனவே இருந்த கோவில் ஊர் மக்களுக்கான பொதுக்கோவில் என்றும் அதை மறைத்து எங்களுடைய சமுதாயத்திற்கானது மட்டும் என்று தற்போது உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கோவில் தேவாங்கர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

ஒப்பம்( R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

5) ஊர் பொதுக்கோவில் என்பதால் தான் தேவாங்கர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல,. வழக்கு சொத்தில் பிரச்சனை ஏற்பட்ட போது சார் ஆட்சியரிடம் ஊர் பொதுமக்கள் சார்பாகத்தான் மனு கொடுத்தோம்ள ன்றால் சரிதான், ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது ஊர் பொதுமக்கள் சார்பாக தாக்கல் செய்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். ஊர் பொதுக்கோவிலை பொய்யாக எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்று சொல்லி உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எனதுபிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்( R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி